
பக்கங்கள் 17

# மாலை முரசு

## நாடாளுமன்றை ஒத்திவைக்க திட்டமிடுகின்றார் ஜனாதிபதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கத் திட்டமிட்டுள்ளார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 19 புதன்கிழமை 06.12.2023 அதிர்வு 128



# ரணிலின் ஆட்சி தொடர்ந்தால் புலிகள் உயிர்த்தெழுவார்களாம்



## மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு அதைத்தான் பறைசாற்றுகின்றது என்கிறார் பீரிஸ் எம்.பி.

புலிகளை நினைவேந்தத் தமிழர்களுக்கு அனுமதி வழங்கிய ரணிலின் ஆட்சிக்கு முடிவுகட்டச் சிங்கள மக்கள் அணிதிரள வேண்டும் என்று இனவாத சிந்தனையுடன் அறைகூவல் விடுத்துள்ளார் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் முக்கியஸ்தர் ஜி.எல்.பீரிஸ் எம்.பி. 04



## மைத்திரி, கோட்டாவைக் கொலை செய்யச் சதி: வழக்கிலிருந்து நாலக விடுதலை

2019 ஆம் ஆண்டு இடம்பெற்றது எனக் கூறப்படும் பிரமுகர்களைக் கொலை செய்யும் சதி தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா கொழும்பு கோட்டை நீதிமன்றத்தால் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொலிஸ் அதியட்சகர் ஒருவரைக் கொலை செய்வதற்குச் சதி மேற்கொண்டதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. 04

## இந்திய மீனவர்கள் 17 பேர் இன்று கைது

(ந.லோகதயாளன்)

மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் கடற்பரப்புக்களுக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் மூன்று படகுடன் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் இராமேஸ்வரத்தில் இருந்து இன்று காலை மூன்று படகுகளில் புறப்பட்ட மீனவர்களே இன்று மாலை இலங்கையின் மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் கடற்பரப்புக்களுக்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த வேளையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 04

## உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்கி மூன்றரை வயது சிறுவன் சாவு

வவுனியா, நெடுங்கேணி பிரதேசத்தில் வீட்டில் உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்குண்ட சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அந்தச் சிறுவன் யாழ்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

நெடுங்கேணி, பனையாண்டானைச் சேர்ந்த மூன்றரை வயதுடைய சிவலோகநாதன் விந்துஜன் என்ற சிறுவன் 04

## அரச தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறையா?

### அதிபர்கள் பதில் சொல்லட்டும் என்கிறார் மனோ



அரச தமிழ்ப் பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில, தொழில்நுட்ப ஆசிரியர்கள் போதுமானளவு இருக்கிறார்களா? என்று தமிழ் முற்போக்குக் 04

# மாவீரர்கள் நினைவேந்தலுக்கு இங்கு அனுமதி இல்லையாம்!

## கைதுகள் தொடரும் என்கிறார் அமைச்சர் டிரான்

உறவுகளை நினைவு கூருகின்றோம் என்ற போர்வையில் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு நடத்த அனுமதிக்க முடியாது. அதனை நீங்களும் (சில தமிழ் எம்.பிக்கள்) ஊக்குவிக்க வேண்டாம். அவ்வாறான நிகழ்வுகளை நடத்தினால் பொலிஸார் நிச்சயம் கைது செய்வார்கள். இதனைத் தடுக்க முடியாது.

இவ்வாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் திட்டவட்டமாக அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும் போது அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்துள்ளவை வருமாறு–

தமது குடும்பத்தில் உயிரிழந்த ஒருவரை அவரது குடும்ப உறுப்பினர்கள் நினைவுகூர முடியும். நானும் எனது தந்தையின் கல்லறைக்குச் செல்வேன். அவ்வாறு அனைவருக்கும் செல்ல முடியும். ஆனால் வேறு ஒரு நபரின் பிறந்த நாளன்று தந்தையினதோ அல்லது தம்பியினதோ கல்லறைக்கு



செல்வதில்லை. எனது கட்சிக் கொடியை எடுத்துக்கொண்டு கல்லறைக்கு செல்வதும் இல்லை. கட்சிக் கொடி எனக் கூறுகின்றனர், சாதாரண மக்கள் இவ்வாறு கட்சிக் கொடியுடன் கல்லறைக்குச் செல்வதில்லை.

பிரபாகரனின் பிறந்தநாளுக்குக் கொடியுடன் செல்வது குடும்ப உறுப்பினரை நினைவுகூர அல்லவே? இது பயங்கரவாதத்துடன் தொடர்புபடவில்லை, பயங்கரவாத கருத்தியலுடன் சம்பந்தப்படவில்லை எனக் கூற முடியாது.

உண்மைத் தகவல்களை வெளியிடும்போது சிலருக்குக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. என்னை ஏன் கதைக்க விடமாட்டோம் என்கிறீர்கள் என்பது புரிகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நாம் தவறாக பயன்படுத்தவில்லை. கைதானவர்கள் 48 மணி நேரத்துக்குள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். நீதிமன்றம் ஊடாகவே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இப்படியான நிகழ்வுகளை நடத்துவதால்தான் பிரச்சினை. அவ்வாறான நிகழ்வுகளை நடத்த வேண்டாம் என்று சொல்லுங்கள். அவ்வாறு நடத்தினால் பொலிஸார் கைது செய்வார்கள். அதனை நிறுத்த முடியாது. சட்டம் செயற்படுத்தப்படும்.–என்றார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் கிண்ணியா ஒருவர் கைது!

**(அஸ்ஹர் இப்றாஹிம, (அப்துல்சலாம் யாசீம்))**

திருகோணமலை – கிண்ணியா பகுதியைச் சேர்ந்த ஒருவரை ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று இரவு (05) கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து அரச பஸ்ஸில் ஐஸ் போதைப் பொருள் கொண்டு வருகின்றனர் என்று திருகோணமலை போதைப் பொருள் பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



பாலம் போட்டாறு பொலிஸ் சோதனை சாவடியில் சந்தேக நபரை சோதனை இட்டபோது அவரிடம் இருந்து 11 கிராம் 120 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிண்ணியா – குட்டிக்கராச்சி பகுதியைச் சேர்ந்த 30 வயதான மாயாஜால வித்தைக்காரர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர். விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.



# ‘பீஸ் நெட்’ திட்ட தன்னார்வ தொண்டர்களுக்குப் பயிற்சி!

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையின் தேர்தல் தொடர்பான விடயங்களை ஆராய்வதிலும், பக்க சார்பற்ற தேர்தல் செயல்முறைமைகளையும் கண்காணிக்கவும், மக்களது வாக்குரிமையையும் உறுதிப்படுத்தவும், மனிதநேயத்தோடு தேர்தல் கண்காணிப்பை மேற்கொள்ளும் பஃப்ரல் நிறுவனத்துடன் இணைந்து சமூக மாற்றத்துக்காகவும் சமாதான இளைஞர் சமூகத்தை உருவாக்கும் நோக்கிலும் ‘பீஸ் நெட்’ செயற்பாட்டு திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி, அம்பாறை மாவட்ட பல்லின சமூக மக்கள் உள்ளடங்கலாக, சமூக வலைத்தளம் பாவிக்கும் இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், இளம் ஊடகவியலாளர்கள் மற்றும் இளைஞர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த திட்டத்தின் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கான விழிப்புணர்வு வழிகாட்டல் பயிற்சிநெறி அண்மையில் ஜனநாயக இளைஞர்கள் கல்விக் கூடத்தினுடைய பீஸ் நெட் திட்டத்தின் தலைவர் எச்.எம். அமாஸீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்மேற்பார்வையாளராக பஃப்ரல் நிறுவனத்தினுடைய திட்ட முகாமையாளரும், வளவாளருமான திருமதி பிரசன்யா பாக்கியசெல்வம், ஜனநாயக இளைஞர்கள் கல்விக்கூடத்தினுடைய வளவாளரான ஆறுமுகம் சொர்ணலிங்கம், தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி எப்.எச்.ஏ. சிப்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# முதலை தாக்கி உயிரிழந்த நபரின் குடும்பத்துக்கு நஷ்ட ஈடு வழங்கல்!

(ஹஸ்பர்)



தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் பகுதியில் உள்ள பண்ணையாளர்களுடனான கலந்துரையாடலும் முதலை தாக்கி உயிரிழந்த நபரின் குடும்பத்துக்கு நஷ்ட ஈடு வழங்கலும் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் (04) இடம் பெற்றன.

தம்பலகாமம் பிரதேச செயலர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி, மேலதிக அரச அதிபர் ஜெ.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன்(காணி), வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள் , கால் நடை வைத்திய அதிகாரி என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கால் நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. தங்களது கோரிக்கைகளை கால் நடை வளர்ப்போர் மாவட்ட செயலாளரி டம் முன்வைத்தனர்.

இதன் போது தம்பலகாமம் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி முதலை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நபரின் குடும்பத்துக்கு முதல் கட்டமாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மாவட்ட செயலாளரால் வழங்கப்பட்டது.

இதில் தம்பலகாமம் பகுதியை சேர்ந்த பண்ணையாளர்களின் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஆசிரியர்களுக்கு...

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:–

“அரச தமிழ்ப் பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில, தொழில்நுட்ப ஆசிரியர்கள் நாட்டில் போதுமானளவு இருக்கிறார்களா? அல்லது இல்லையா? இது இன்று தமிழ் பாடசாலைகள் எதிர் நோக்கும் பிரதான பிரச்சினையா? அல்லது இல்லையா?

நேற்று நாடாளுமன்றத்தில், தமிழ்ப் பாடசாலைகளில், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக் குறை கடுமையாக நிலவுகின்றது என்று சொன்னேன். மலையகப் பல்கலைகழகம் கட்டாயம் வேண்டும். ஆனால், அதற்கு முன் நமது மாணவர் பல்கலை செல்வதற்கான “கல்வி பாதையை” வெட்டுவோம் என்றும் சொன்னேன். அதுதான் மேலே சொன்ன பாட விதானங்களுக்கான விசேட தமிழ் மொழிமூல ஆசிரியர் பயிற்சி கலா சாலை என்றும் சொன்னேன்.

எனது கருத்துகள் சரியா? பிழையா? என தமிழ் பாடசாலை அதிபர்கள் முதலில் பதில் சொல்லட்டும். அதையடுத்து, அரச பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நம்பி அனுப்பும் அப்பாவி தாய்மார், தந்தைமார் பதில் கூற வேண்டும். கல்வியிலாளர்கள், சமூக உணர்வாளர்கள் பதில் கூறட்டும். எனது நேரடி 0777312770 வாட்சப் எண்ணுக்கு அல்லது எனது நேரடி என்ற மின்னஞ்சலுக்கு பதில்களை அனுப்பட்டும்.

இல்லாவிட்டால், நான் சொல்வதை எல்லாமே எதிர்த்து கட்சி அரசியல் செய்கின்ற, கல்வியை பற்றி எந்தவித தூரப் பார்வையும் இல்லாத அரசியல்வாதிகள் கையில், தமிழ் பிள்ளைகளின் கல்வியை ஒப்படைத்து விட்டு, தந்தை செல்வா சொன்னது போல், “கடவுள் காப்பாற்றுவார்” என ஒதுங்க வேண்டும்.

மலையகம் என்றால், “மலைகளை” மட்டும் தேடி ஓடாதீர்கள். கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும், இங்கு வந்து தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பாமர மலையக மக்களின் பிள்ளைகள்தான் என்றும் கூறினேன். அதேபோல் கிளிநொச்சி, வன்னி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இருந்தும் தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பிள்ளைகளுதான் கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் மாணவர்கள்.

எனது நோக்கம், இதுதான். தமிழ்மொழி மூல, இரசாயனம், பௌதிகம், உயிரியல், புவியல், அரசறிவியல், கணக்கீடு, வணிகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களை விசேட பயிற்சி அளிக்கும் ஆசிரிய பயிற்ச்சி கலாசாலை அமைய வேண்டும். அவர்களை, கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, பதுளை, கம்பஹா, மொனராகலை, குருநாகலை, புத்தளம், காலி, மாத்தறை ஆகிய மாவட்ட தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்பதாகும். அவசியப்படும் வன்னி, கிழக்கு மாகாண பாடசாலைகளிலும் நியமிக்க வேண்டும்.

நியமிக்கப்படுபவர்கள் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் அதே பாடசாலையில் பணி செய்ய வேண்டும். தவிர்க்கமுடியாத இடமாற்றம் வேண்டுமென்றாலும்கூட, அதே பாடத்துக்கான மாற்று ஆசிரியர் கிடைத்தே பிறகே இடமாறி செல்ல வேண்டும்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி நேற்று நாடாளுமன்றத்தில், தயவு செய்து பாரத பிரதமர் மோடி, மலையக மக்கள் நல்வாழ்வுக்காக தருவதாக உறுதியளித்துள்ள, இலங்கை ரூபா.300 கோடிக்கும் குறையாத நிதியை “தமிழ் மொழிமூல” ஆசிரியர் பயிற்சிக் கான விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலை அமைக்க பயன்படுத்துங்கள் என்றும் சொன்னேன். மலையக பல்கலைக் கழகம் அதையடுத்து வரட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு இப்போது அவசரப்பட வேண்டாம் என்றுதான் சொன்னேன்.

இந்த வருடம், 2023 ஜனவரி மாதமே இதுபற்றி நான் இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் கோபால் பாகலே உடன் நான் உரையாடியுள்ளேன். எமக்கான விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலையும், எமது பெண்களுக்கான விசேட தாதியர் பயிற்சி கல்லூரியும் அமைத்து கொடுங்கள் என எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தேன். அதற்கான நிதியை பாரத பிரதமர் நரேந்திர மோடியிடம் கேட்டு பெற்று தாருங்கள் எனக் கூறினேன்.

இலங்கை அரசின் திட்டங்கள் மலையகமக்கள்தொடர்பில்நடக்கட்டும்.ஆனால், பாரத பிரதமர் நரேந்திர மோடி வழங்கும் நிதியை, இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும், இலங்கை அரசின் கல்வி அமைச்சும் இணைந்து பயன்படுத்த வேண்டும். இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் உள்ள “இலங்கை தோட்ட தொழிலாளர் கல்வி அறக்கட்டளையை, மீண்டும் புதுபித்து, அதன் நோக்கங்களை விரிவிபடுதி இதை செய்து தாருங்கள்” என நேற்றுக்கூட நான் நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் கூறினேன்.

நான் கூறிய விடயங்களை புரிந்துக் கொள்ள முடியாத தமிழ் எம்.பிக்களை பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால், அரச பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நம்பி அனுப்பும் அப்பாவி பெற்றோருக்குப் புரியும் என நினைக்கிறேன். தமிழ் பாடசாலை அதிபர்களுக்கும் புரியும் என நம்புகிறேன்.” – என்றார்.

## நாடாளுமன்றை...

எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதி அளவில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டால் நாடாளுமன்றின் செயற்குழுக்கள் அனைத்தும் இரத்தாகும் என்பதுடன் நாடாளுமன்றம் மீள ஜனாதிபதியால் கூட்டப்பட்டதன் பின்னர் இந்தச் செயற் குழுக்கள் மீண்டும் புதிதாகச் செயற்படத் தொடங்கும்.

ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்க முடியும்.

புதிய நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போது ஜனாதிபதி அக்கிராசன உரையுடன் சம்பிரதாயபூர்வமாக அமர்வை ஆரம்பித்து வைப்பார்.

தற்போது கோப் குழுவின் தலைவராகச் செயற்பட்டு வரும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார எம்.பியை அந்தப் பதவியில் இருந்து நீக்கும் நோக்கில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைக்கவுள்ளார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனெனில் கோப் குழுவின் தலைவர் இலங்கை கிரிக்கெட் விவகாரத்தில் விசாரணை நடத்தி வருகின்றார்.

கிரிக்கெட் நிறுவனத்தின் திட்டமொன்றின் ஆலோசகராகப் பேராசிரியர் ரஞ்சித் பண்டார எம்.பி. கடமையாற்றி வருகின்றார்.

எனவே, நிறுவனத்தின் சார்பில் பணியாற்றி வரும் ஒருவர் அந்த நிறுவனம் தொடர்பில் விசாரணை நடத்துவது பொருத்தமாகாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன் அடிப்படையில் ரஞ்சித் பண்டாரவை கோப் குழு தலைமைப் பதவியிலிருந்து நீக்கும் வகையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

## வழக்கிலிருந்து

இந்தநிலையில், குறித்த குற்றச் சாட்டில் அவருக்கு எதிரான சாட்சியங்கள் போதுமானதல்ல என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை குறித்து வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

## உழவு இயந்திரத்தின்...

கடந்த மாதம் 21ஆம் திகதி உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சென்று சிக்குப்பட்டு படுகாயமடைந்திருந்தார்.

அவர் அருகில் உள்ள வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையிலே நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

## இந்திய மீனவர்கள்...

மன்னார் கடற்பரப்பில் ஒரு படகுடன் கைதான தமிழக மீனவர்கள் மன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளனர். அதேநேரம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் இரண்டு படகுகளுடன் கைதான தமிழக மீனவர்கள் காங்கேசன் துறை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## ரணிலின் ஆட்சி...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆட்சி தொடர்ந்தால் எமது படையினரால் சாகடிக்கப் பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் கூட உயிர்த்தெழுவார்களாம். அவர்களின் தனிநாட்டுக்கான போராட்டம் மீண்டும் ஆரம்பமாகும். எமது படையினரின் தியாகம் வீணாகிப்போகும். அவ்வளவுக்கு ரணிலின் ஆட்சி மோசமடைந்து செல்கின்றது.

வடக்கு, கிழக்கில் கடந்த மாதம் ‘மாவீரர் நாள்’ என்ற பெயரில் தமிழர்களால் அரங்கேற்றப்பட்ட நிகழ்வுகள் ரணில் அரசின் முழு அனுமதியுடன்தான் நடைபெற்றன.

மரணித்த புலிகளை நினைவேந்த அனுமதி வழங்கிவிட்டு அதில் பங்கேற்றவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரணில் அரசு நாடாளுமன்றத்திலும், வெளியிலும் கருத்துக் களை வெளியிடுவது வேடிக்கையானது. இப்படிக் கூறி சிங்கள மக்களை ஏமாற்றலாம் என்று ரணில் அரச தரப்பினர் தப்புக் கணக்குப் போடுகின்றனர்.

மைத்திரி – ரணில் தலைமையிலான அரசுதான் புலிகளை நினைவேந்த முதலில் அனுமதி வழங்கியது. இப்போது ரணில், மொட்டுக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்துவிட்டு மீண்டும் புலிகளைப் பகிரங்கமாக நினைவேந்த அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே, புலிகளை நினைவேந்தத் தமிழர்களுக்கு அனுமதி வழங்கிய ரணிலின் ஆட்சிக்கு முடிவுகட்டச் சிங்கள மக்கள் அணிதிரள வேண்டும்.” – என்றார்.





# மண்முனை, கரடியனாறு உயர்தர மாணவர்களுக்குக் கருத்தரங்கு!

(பழுவூரான்)

மண்முனை மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கரடியனாறு மகா வித்தியாலயத்தில் இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு 232 ஆவது இராணுவ படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் கல்விக் கருத்தரங்கு நேற்று செவ்வாய்க்கிழமை (05) ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் 8 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நான்கு நாள்கள் இடம்பெறவுள்ளது.

மாணவர்களின் பாண்டு வாத்தியம் முழங்க அதிதிகள் வரவேற்கப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வானது 23 ஆம் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நிலந்த பிரேமரத்ன தலைமையில் கரடியனாறு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கு பிரிகேடியர் அசித்த புஸ்பகுமாரவின் எற்பாட்டில் உன்னிச்சை கெமுனு வொட்ச் பிரிவினரால் எற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் செயற்றிட்டத்தில் 5 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின் தங்கிய பிரதேச மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கருத்தரங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பாடசாலையில் வணிகப் பிரிவு மற்றும் கலைப் பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவியர் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மண்முனை மேற்கு கல்வி வலய பிரதிக் பணிப்பாளர் என். குகதாசன்,பாடசாலையின் அதிபர் திருமதி சகிலா ஜெயக்குமார், மாவட்ட தகவல் பொறுப்பதிகாரி வி. ஜீவானந்தன், இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பு





(அபு அலா)

கடந்த 13 வருடங்களாக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளராக கடமையாற்றி வரும் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரின் சேவைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஏறாவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

ஏறாவூர் மாவட்ட ஆயுள்வேத நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கௌரவிப்பு நிகழ்வு, வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.எஸ்.எம். லாபீர் தலைமையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரின் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், ஏறாவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனநாயக விரோதி

இலங்கையின் அரசமைப்பு மற்றும் அரசமைப்பு திருத்தங்களின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டாலும், அப்பதவிகளில் இருப்போர் தமது அதிகாரங்களை வைத்துக்கொண்டு, அத்துமீறுவதில் தொடர்ந்தும் குறியாகவே இருக்கின்றனர். அதற்குத் தாமும் விதிவிலக்கல்லர் என்பதை இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நிரூபித்து, உறுதிப்படுத்தி வருகின்றார்.

தொத்துப்பொறியில் - அதிர்ஷ்டத்தில் - ஜனாதிபதியானவர் அவர். மக்கள் நேரடியாக அவரைத் தெரிவு செய்யவில்லை. இரண்டு தடவைகள் ஜனாதிபதி தேர்தலில் மக்களினால் நிராகரிக்கப்பட்டவர். கடைசி ஜனாதிபதித் தேர்தலில் அவரை வேட்பாளராக நிறுத்தவே அவரது கட்சி மறுத்துவிட்டது.

ஆயினும், இப்போது கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி பின் கதவால் ஜனாதிபதியாகிய அவர், இப்போது நிறைவேற்றதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஜனநாயகத்தின் மிகப் பிரதான அடிப்படையான - மக்கள் தங்கள் இறைமையை வெளிப்படுத்துகின்ற - தேர்தல் முறைமையிலும் அதீத தலையீடு செய்து ஆட்டிப்படைக்கின்றார்.

தேர்தல்கள் உரிய காலத்தில் - சுயாதீனமான முறையில் - சுதந்திரமான கட்டமைப்புகளினால் - நடத்தப்பட வேண்டும், அதற்கேற்ப சட்ட முறைகள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அரசமைப்புத் திருத்தங்கள் செய்யப்பட்டன. சுயாதீன தேர்தல் ஆணைக்குழு முறைமை கொண்டுவரப்பட்டது. ஆயினும், அந்தக் கட்டமைப்புகளையும் தமது நரி தந்திர நடவடிக்கைகளினால் நொண்டிவாத்து ஆக்கியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

எல்லாத் தேர்தல்களையும் - ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் போன்றவை அனைத்தையும் - திகதி தீர்மானித்து, உரிய வேளையில் நடத்தும் பொறுப்பும் அதிகாரமும், அரசமைப்பின் கீழ் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கே வழங்கப்பட்டது. ஜனாதிபதிக்கு அல்ல.

எனினும் இதில் ஓரிரு புறநடைகள் இருக்கவே செய்தன.

- நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இரண்டரை ஆண்டுகள் முடிந்த பின்னர் எஞ்சிய இரண்டரை ஆண்டு காலத்தில் ஏதேனும் சமயத்தில் அதைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அப்படி அது முன்கூட்டியே கலைக்கப்பட்டால் தேர்தல் ஆணையம் உடனடியாகத் தேர்தல் நடத்தும் பொறுப்பை முன்னெடுக்கும்.
- சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி பரிந்துரைத்தால் அந்த சர்வஜன வாக்கெடுப்பை தேர்தல் ஆணையமே கவனிக்கும்.
- உள்ளூராட்சி சபையின் பதவிக்காலத்தை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஓராண்டுக்கு நீடிக்கலாம். மற்றும் படி அவற்றின் பதவிக்காலம் முடியும் போது அதற்கான தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும்.

- இந்தப் புறநடைகள் தவிர்ந்த ஏனைய சமயங்களில் எல்லாம் தேர்தல் நடத்தும் அதிகாரம் சுயாதீன தேர்தல் ஆணையத்துக்கே உள்ளது. ஜனாதிபதிக்கல்ல. ஆனால் அந்த அதிகாரத்தையெல்லாம் சூறையாடிவிட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஐந்து பேர் கொண்ட தேர்தல் ஆணையத்தில் ஓர் ஆணையாளர் பதவி விலகி விட்டார். அவரை வடக்கு மாகாண ஆளுநராக நியமித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவரது இடத்துக்கு ஐந்தாவது தேர்தல் ஆணையாளரை நியமிக்காமல் வருடம் தாண்டியும் இழுத்தடித்து, தேர்தல் ஆணையத்தின் செயற்பாடுகளை நொண்ட வைக்கின்றார் ஜனாதிபதி.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் ஏற்பாட்டை தமக்குக் கீழ் உள்ள நிதி அமைச்சு மூலம் நிதியை வெட்டி முடக்கி இருக்கின்றார் அவர்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் - ஏற்பாடு - அவருக்குக் கிடையவே கிடையாது. அதையும் கூடத் தாமே தீர்மானிப்பவர் போல அடுத்த ஆண்டில் அத்தேர்தல் நடக்கும் என்று அறிக்கை விடுகின்றார் அவர்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான சட்டத்தை முடக்கியது அவர் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசுதான். அவரே அதை முன்நின்று செய்தார். அந்தச் சட்டத்தைச் சாதாரண பெரும்பான்மை மூலம் மீளக் கொண்டு வந்து, தேர்தலை நடத்த அனுமதிக்கும் வாய்ப்பிருந்தும் அதைத் தொடர்ந்தும் இந்நாடு முடக்கி வருகின்றார் அவர்.

இவ்வாறு சுயாதீனத் தேர்தல்களில், தனது அதிகாரத்துக்கு அப்பால் சென்று, தலையிட்டு அரசியல் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த வகையில் ஒரு ஜனநாயக விரோதிதான்!

# பாடசாலைக்கு மின்விசிறி அன்பளிப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)



கற்பிட்டி திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ள பிரதான மண்டபத்திற்கு 18 மின் விசிறிகள் மற்றும் 250 பிளாஸ்டிக் கதிரைகள் தேவையாக உள்ளன.

இந்த நிலையில் முதல் கட்டமாக பாடசாலையின் 98 உயர்தர வகுப்பு பழைய மாணவர் குழுவால் இரண்டு மின்விசிறிகள் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அதிபர் எம்.ஐ.எம் ஏ றஸ்ஸாக்கிடம் இவை கையளிக்கப்பட்டன.

பாடசாலையின் அபிவிருத்தியில் பழைய மாணவர்களின் பங்கு இன்றியமையாதது. இவ்வாறான முன்னுதாரண செயற்பாடுகளை அதிபர் என்ற ரீதியில் தான் வரவேற்பதாகவும், பாடசாலை சார்பாக தமது நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.




# கல்முனையில் நடைபெற்றது உலக பாரிசவாத தின நிகழ்வு!

(வி.ரி.சகாதேவராஜா)

உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்திய சாலையில் உலக பாரிசவாத தின நிகழ்வு நடைபெற்றது.

வைத்தியசாலை பணிப்பாளர் வைத் திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந்த் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் டாக்டர எம்.என்.எம். சுவைப் மின் ஏற்பாட்டில் பாரிசவாத பிரிவு உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் உதவியோடு வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நிகழ்வு நடை பெற்றது.

இந்த நிகழ்வின் முதல் நிகழ்வாக வரவேற்புரையை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, பாரிசவாத பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் ஜி.சோளவேந்தன் வழங்கினார்.

தொடர்ந்து டாக்டர் எம்.ஏ.ஏ. சுஜா வால் பாரிசவாத நோய் தொடர்பான விளக்கவுரை நடைபெற்றது.

தொடர்ந்து வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் சுவைப், பாரிசவாத நோய் நிலைமை பற்றிச் சிறப்புரையாற்றினார்.



தொடர்ந்து பாரிசவாத பிரிவு உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் பாரிசவாத நோயில் இருந்து எம்மையும் எமது சமூகத்தினரையும் பாதுகாக்க உருவாக்கப்பட்ட விழிப்புணர்வுடன் கூடிய நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் பி. பிரேமினி, இதயவியல் நிபுணர் டாக்டர்.எஸ். கசுன் துஷியந்த லொகுகெடகொட, தாதிய பரிபாலகர் என். சசிதரன், தாதிய பரிபாலகி திருமதி. எல். சுஜேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள், வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள், தாதியஉத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். நீரிழிவு முகாமைத்துவ தடுப்பு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி.கே. மனோஜினி நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியைத் திட்டமிடல் பிரிவு பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் பி.செல்வகுமார் தொகுத்து வழங்கினார்.




# மாணவர்களுக்கு மழைக்கவசம்!

கனடிய இராணுவ உயர் அதிகாரியாகவும், ஒட்டாவா நகரின் பொலிஸ் அதிகாரியாகவும் கடமையாற்றிய விஜயாலயன் மதியழகன் ஞாபகார்தமாக ஆரம்பிக்கப்பட்ட விஜயாலயன் அறக்கட்டளை சார்பாக முல்லைதீவு உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலய மாண வர்களுக்கு ஒரு தொகுதி மழைக்கவசம் வழங்கப்பட்டது.

வித்தியாலயஅதிபர் ட.குணபாலன் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் கரைதுறைப்பற்று முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் சு.ஜெகதீசன், அறக்கட்டளையின் இணைப்பாளர் நா.பார்த்தீபன், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# அம்பாறை ஹாடி தொழில் நுட்ப நிறுவன ஸ்தாபகரது சிரார்த்த தினம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஸ்தாபகர் கனடாவைச் சேர்ந்த ஈவன் ஏ ஹாடியின் 60 ஆவது சிரார்த்த தினம் ஹாடி மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கல்லோயா திட்டத்தை அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பித்து ,எதிர்கால இளைஞர்கள்,யுவதிகள் தொழில் நுட்பவாதிகளாக இந்தப் பூமியில் திகழ வேண்டும் என்பதற்காக அம்பாறையில் ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவியவர்.

இந்த நிகழ்வில் அன்னதானம், பிரித் மற்றும் ஏனைய வழிபாடுகளில் தற்போதய மாணவர்களும், பழைய மாணவர்களும் ஈவன் ஏ ஹாடியின் நினைவுத் தூபி முன்னிலையில் ஈடுபட்டனர்.



# கல்முனை சாஹிரா மாணவர் கௌரவிப்பு!

(நூருல் ஹுதா உமர்,
ஏ.எஸ்.மௌலானா, யு.கே.காலிதீன )

இந்த முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் 9ஏ சித்திகளைப் பெற்றுக் கொண்ட 23 மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (04) நடைபெற்றது.



கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது, மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் தலைவரும் கல்லூரியின் பழைய மாணவருமான கலாநிதி எம்.எஸ். எம். முபாறக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பணப் பரிசில்களை வழங்கினார்.



இந்த நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கல்லூரியின் அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் டாக்டர் சனுஸ் காரியப்பர் உட்பட நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவ சங்கத்தின் உறுப்பினர்களும் பங்கேற்றனர்.



# பெண்கள், சிறுவர்கள் மீது இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

பெண்கள், சிறுவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான முன்னாயத்த பரிந்துரைப்பு வேலைத் திட்டமும் விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகளும் கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன என்று இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நிகழ்வு இன்று (06) இடம்பெற்றது.

மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், திருகோணமலை பெண்கள் சிறுவர் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி எம். நளினி, திருகோணமலை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி அலுவலர் சுவர்ணா தீபானி, பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி எம். றபீக் உட்பட மாவட்ட, பிரதேச செயலகங்களின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், செயற்பாட்டாளர்கள், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அலுவலர்கள் ஆகியோர்கள் இந்த நிகழ்வுகளில் இணைந்து கொண்டனர்.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக வன்முறைகள், இம்சைகள் வெறுப்புணர்வூட்டக் கூடிய சம்பவங்கள் இடம்பெறும் பொழுது அதுபற்றி பொது மக்கள் உரிய தரப்பினருக்குத் தெரியப் படுத்தும் இலகு வழிமுறையில் அமைந்த அவசர தொலைபேசி இலக்கங்கள் கொண்ட சுவரொட்டிகள் மக்கள் கூடும் பொது இடங்களிலும் பொதுப் போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து பஸ்களிலும் ரயில் நிலையத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு ஒட்டப்பட்டன.

“வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம், வன்முறைகளற்ற வீடுகளையும் சமூகத்தையும் உருவாக்குவோம், பொது இடங்களில் ஏற்படும் பாலியல் தொந்தரவுகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவது பாதிக்கப்பட்டோரின் உரிமை, பெண்களையும் சிறுமிகளையும் பாதுகாத்து அவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாது ஒழிக்க அனைவரும் ஒன்றிணைவோம்” ஆகிய தொனிப் பொருள்களில் அமைந்த அவசர முறைப்பாட்டு இலங்கங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் பரவலாக பொது இடங்களில் ஒட்டப்பட்டன.

அத்துடன், பெண்கள் சிறுவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இடம் பெறும் துன்புறுத்தல்கள், வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், கடத்தல்கள், கொடுமைப்படுத்தல்கள், சித்திரவதைகள், சுரண்டல்கள், மனித உரிமை மீறல்கள், இளவயதுத் திருமணம், பாதுகாப்பின்றியும் பராமரிப்பின்றியும் கைவிடல் உள்ளிட்ட பல்வகைப் பாதிப்புகள் இடம்பெற்றால் அவற்றைத் தடுப்பதற்கும் பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கும் ஏற்ற வகையில் உதவிக்கு அழைக்கக் கூடிய விவர இலக்கங்களைக் கொண்ட பெரிய காட்சிப் படுத்தல் பதாதைகளும் பொது இடங்களில் நிறுவப்பட்டன.

அவற்றில் பிரதேச மட்ட சட்ட உதவி ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், வைத்தியசாலை உள்ளிட்ட 16 பிரிவுகளின் அவசர உதவி அழைப்பிலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்தின் ஒத்துழைப்புடன் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.





# சந்நிதியான் ஆச்சிரமம் வன்னியில் பல்வேறு உதவிகள்!

வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரமத்தால் வன்னி பகுதியிலும் நேற்று முன்தினம் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம், பனிக்கன்குளம் கிராமத்தில் வசிக்கும் குடும்பம ஒன்றுக்கு அவர்கள் வசித்த வீட்டைத் திருத்தம் செய்வதற்கு ஒரு லட்சத்து 502 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வற்றாப்பளை பிரதேசத்தை சேர்ந்த பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவி ஒருத்திக்கு அவரது அடிப்படை செலவுகளுக்காக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

வவுனியா – புதிய கற்பகபுரம் பிரதேசத்தை சேர்ந்த விசேட தேவைக்குட்பட்ட நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்று சித்தியடைந்த மாணவிக்கு 47 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் வழங்கப்பட்டது.

வவுனியா – ஈச்சங்குளம், கோதண்டர் நொச்சிக்குளம் பிரதேசத்தை சேர்ந்த நொச்சிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம்– 09 இல் கல்வி கற்கும் மாணவிக்கு 47 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் வழங்கப்பட்டது.

வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் அவர்களைக் கௌரவிப்பதற்கும் 81 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வுதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.



















# கிழக்கு பிரதி அஞ்சல் மா அதிபருக்கு சேவை நலன் பாராட்டு விழா

(ஏ.எல்.எம்.)

கிழக்குப் பிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் காமினி விமலசூரியவுக்கு, அக்கரைப்பற்று அஞ்சல் அத்தியட்சகர் பிரிவின் அஞ்சல் குடும்பத்தினரால் பிரியாவிடையுடன் கூடிய சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த சேவை நலன் பாராட்டு விழா நிகழ்வில், பிரதேச அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள், தபாலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக பிரதம இலிகிதர் ஏ.சீ.நளீரின் வரவேற்புரையுடன் நிகழ்வு இடம்பெற்றது.



அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ்.பிரியந்த விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஓய்வு பெற்றுச் செல்லும் பிரதி அஞ்சமா அதிபதி காமினி விமல சூரிய நிகழ்வில், பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் மற்றும் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



# கல்முனை சுகாதார பணிமனையில் உலக எயிட்ஸ் தின நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகஸ்தர்களுக்கான எச்.ஐ.வி. தொடர்பான விஷேட விழிப்புணர்வு நிகழ்வு பணிமனையின் கேட்போர் கூடத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நேற்று முன்தினம் (4) இடம்பெற்றது.

“சமூகத்தை வலுப்படுத்துவோம் எயிட்ஸைத் தடுப்போம்” எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் வளவாளராக கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புத் திட்டத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம். தில்ஷான் எயிட்ஸ் தொடர்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தினார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஸக்கிலா இஸ்ஸடீன் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்கள் மற்றும் பணிமனையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.






### காரைதீவிலிருந்து கல்முனை வரை பெண்கள் பேரணி!

# அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் 16 நாள் செயற்பாட்டு வாரம் ஆரம்பம்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் 16 நாள் செயற்பாட்டு வாதத்தின் ஓரங்கமாக இன்று (6) புதன்கிழமை காரைதீவில் இருந்து கல்முனை வரை பெண்கள் பேரணி இடம் பெற்றது.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரனின் ஏற்பாட்டில் தலைவி திருமதி தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் பேரணி காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட செயலகங்களில் கடமையாற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இன்று புதன்கிழமை காலை காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இருந்து இந்தப் பேரணி ஆரம்பமானது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மகளிர் கலந்து கொண்டனர்.

“வீட்டு வன்முறையை இல்லாது ஒழிப்போம், சிறுவர் உரிமையை பாதுகாப்போம், பெண்கள் உரிமையை பாதுகாப்போம், பெண்கள் சிறுவர்கள் வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம், ஆண், பெண் சமத்துவம் பேணுவோம், பணிப் பெண்களாக வெளிநாடு செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம், வேலைக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவோம், பேருந்துகளில் செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை இந்த ஊர்வலத்தில் சென்றோர் கொண்டு சென்றனர் .

இவர்கள் ஐந்து கிலோ மீற்றர் பிரதான வீதி ஊடாக கல்முனையை 11 மணியளவில் சென்றடைந்து கல்முனை பிரதான மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் பெண்கள் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகத்தை நடத்தினர். அங்கிருந்து பேரணி கலைந்து சென்றது.

பேரணிக்கு அரச அதிபர் அங்கீகாரம் அளித்ததோடு பொலிஸாரின் பாதுகாப்பும் கிடைக்கப்பெற்றது.









# அடிப்படை வசதிகளை எதிர்பார்த்து நிற்கும் சந்தனவெட்டை கிராம பழங்குடியின மக்கள்!

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

இலங்கையில் பல்லின மக்கள் வாழ்கின்ற போதும் இன மதம் மொழியால் வேறுபட்டாலும் பழங்குடி மக்களும் வாழ்கின்றார்கள். திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமமே சந்தனவெட்டை கிராமத்தில் அதிக பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மூதூர் நகரில் இருந்து தொலைவில் அமையப் பெற்ற இந்தக் கிராம மக்கள் பல்வேறு பின்னடைவுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமைகளாக காணப்படும் மனித அரசியல் சிவில் உரிமைகள் போன்றன இவர்களுக்கும் கிடைக்கப் பெறுவது அரிதாகவே காணப்படுகிறது.

இது தொடர்பான நிலையை கருத்தில் கொண்டு விழுது ஆற்றல் மையத்தின் ஏற்பாட்டில், ஓரங்கட்டப்பட்ட சமூகத்துக்கான இளையோரின் குரல் என்ற தொனிப்பொருளின் கீழ் நடமாடும் சேவையொன்று 21.11.2023 அன்று இந்தக் கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் இடம்பெற்றது.

பழங்குடி மக்களது ஜீவனோபாயமானது மிகவும் பின்னடைந்துள்ள நிலையில் சமூகமயமாக்கப்படாமை அந்த மக்கள் அதற்குள் செய்வதறியாது தடுமாறுகின்றனர். அரச சேவையை பெறுவது முதல் பல இன்னோரன்ன சட்ட ரீதியான ஆவணங்களை பெற முடியாது வாழ்கின்றார்கள். இது தவிர பல விழிப்புணர்வற்ற நிலை காரணமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகளும் அங்கு இருந்து வருகின்றது.

பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்பின்மை, கல்வி, மந்தபோசணை, பால் நிலை சார்ந்த பல பிரச்சினைகளை தீர்க்கவும் சேவை வழங்குனர்களையும் வசதிப்படுத்தக் கூடிய வளங்களை இணைப்பு செய்ய கூடியதூமாக இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

அன்றைய நடமாடும் சேவையில் சம்பூர் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு உத்தியோகத்தர்கள், மூதூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பதிவாளர் கிளை மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் மதஸ்தல உறுப்பினர்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள் என பலரது ஒத்துழைப்புக்களோடு இடம் பெற்றதோடு பிறப்பு, அடையாள அட்டை விவாக பதிவு போன்றன அந்த் மக்களுக்கான சேவைகளாக திறம்பட இடம்பெற்றன.

ஆரம்ப கட்டமாக பிள்ளையின் பிறப்பு முதல் பிறப்பு சான்றிதழ் கூட பலருக்கு இல்லாத நிலை இங்கு காணப்படுகிறது. இளவயது திருமணம் அதிகரித்தும் காணப்படுகிறது. இது போன்ற விழிப்பு நிலை மக்களின் துயர் துடைக்க பழங்குடி என்கின்ற மக்கள் என்பதை ஒதுக்காது சேவைகளை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்பதே அந்த மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார சீர்கேடு உட்பட ஆரோக்கியமான வாழ்வு தொடர்பான விழிப்புணர்வும் இதன் போது இடம்பெற்றது. குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி பிரவீனாவால் இளவயது திருமணம், இளவயதில் கர்ப்பம் தவிர்த்தல், மந்தபோசாக்கு போன்ற பல விடயங்களை அணுகுவதற்கு தங்களது களவிஜயத்தின் போது பெற்றார்கள் தங்களை அணுகுவதும் குறைவாக காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இது தவிர பாடசாலை இடைவிலகல் போன்றனவும் கல்வியில் பல பின்னடைவுகளை ஏற்படுத்துகிறது. பல தரப்பட்டவர்களுக்கான பிறப்பு சான்றிதழ் அற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் இவ்வாறான நிலை இனிமேலும் இருக்கதக்கவாறான சேவை அம் மக்களுக்கு கிடைக்க வேண்டும் ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமை அம் மக்களுக்கும் கிடைக்க வழிசெய்ய வேண்டும் இதற்காக துறைசார் அரச நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இந்தக் கிராம மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடக்கம் பல வீதிகள் உட்பட அபிவிருத்திகளிலும் புறக்கணிப்பு செய்யப்படுவதாக அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏனைய சமூகத்துடனான உறவாடல் இன்றிய நிலையில் பழங்குடி என்ற நிலைக்குள் வாழ்க்கை நடத்தினாலும் இந்த மக்களைச் சகல உரிமைகளுடனும் சுதந்திரங்களுடனும் வாழ வைக்க வேண்டும்.

பல்வேறுபட்ட இக் கட்டான சூழ் நிலை இந்த மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. நாட்டில் ஏற்பட்ட அண்மைய பொருளாதார நெருக்கடி உட்பட தற்போதுவரை பல கஷ்டங்களுடன் இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பல வருட காலமாக அடையாள அட்டை இன்றி காணப்பட்ட நான் தற்போது இந்த நடமாடும் சேவை மூலமாக விண்ணப்பித்துள்ளேன். இதன் மூலம் அடையாள அட்டை கிடைக்கும் என நம்புகிறேன். இது தொடர்பில் முன்னர் எப்படி பெறுவது என்று தெரியாமலும் இருந்தது. எனவே இந்த விழுது நிறுவனத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று நடமாடும் சேவையின் மூலம் பயனடைந்த இந்தக் கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

வளங்களை இணைப்புச் செய்வதன் மூலமும் மக்களுக்கான அரச சேவைகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்பதை விழுது போன்ற இளையோருக்கான குரல் எடுத்துக்காட்டியுள்ளது .

மக்கள் பிரச்சினைகளை சமுதாய நிறுவனங்கள் இணைந்து கூட்டாக தீர்க்க முயற்சி எடுக்க முடியும் அது

**(14ஆம் பக்கம் பார்க்க)**

# அடிப்படை வசதிகளை...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற கட்டமைப்புக்களை இக் கிராமத்தில் வலுப்படுத்த வேண்டும் கிராம அபிவிருத்தி சங்கம், மகளிர் அபிவிருத்தி சங்கம் உட்பட பல அமைப் புக்களின் வலுவூட்டல் மூலமாக மக் களை விழிப்புணர்வுள்ளவர்களாக மாற் றியமைத்து அவர்களது உரிமைக ளுக்கு செவிமடுத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

பலருக்கு இந்த கிராமத்தில் பிறப்புச் சான்றிதழ் இல்லை இதன் மூலமாகக் கிடைக்கும் என நம்புகிறேன். இது போன்று இன்னும் பல சேவைகளை இங்கு செய்ய வேண்டும் எனவும் எதிர் பார்க்கிறோம் என குறித்த கிராமத்தின் பெண்மணி அந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தங்களது தேவை கருதி மூதூர் நகருக்கு செல்வதாயின் பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும். சீரான போக்குவரத்து வசதியின்மையால் இது சாத்தியம் குறைவாகவே காணப் படுகின்றது.

இவ்வாறான நிலையில் சிறுபான்மை இன தமிழ் பேசும் மக்களுக்கான உரி மைகள் சரியாக சமமாக மதிக்கப்பட்டு செயற்படக் கூடியவாறு இருக்க வேண்டும்.

இந்த மக்களின் வாழ்வும் ஏனைய மக்களின் வாழ்வும் வித்தியாசமானது இது தொடர்பில் தேவை நலன் கருதி துரிதமான சேவைகளை அந்த மக்கள் எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றனர்.



# வடக்கு ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் உருவாக்கம்!

(எஸ். நிதர்ஷன்)

வடபுல ஏற்றமதியாளர்களை ஒன்றி ணைத்து வடக்கு ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய் யப்பட்டுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியின் துறைசார் நிபுணர்களின் வழிகாட்டுத லுடன், ஹட்டன் நஷனல் வங்கியின் வடபிராந்திய தலைமை அலுவலகத்தில் கடந்த 30ஆம் திகதி அங்குரார்ப்பனம் செய்யப்பட்டது.

நிகழ்வில், வங்கியின் தலைமையகத் தில் இருந்து வருகை தந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர் மற்றும் நுண்பாக நிதிக்கான பிரதிப் பொது முகாமையாளர் ரஜீவ் திசாநாயக்க, சிறிய நடுத்தர உடற் பத்தியளர் மற்றும் கூடடாண்மைக்கான தலைமையாளர் என். கேதீஸ்வரன், வட மாகாண ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் கனோ ஜன், யாழ். பல்கலைக்கழக சந்தைப் படுத்தல் பிரிவுத் துறைத்தலைவர் பேராசி ரியர் எஸ். சிவேஷன், வடமாகாண தொழிற்துறைத் திணைக்கள தொழிற் துறை மேம்பாட்டு உத்தியோகத்தர் ராக வன் மற்றும், வடமாகாண ஏற்று மதியாளர்களுடன், வங்கியின் பிராந்திய அலுவலகர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் இன்றைய நலிவுற்ற பொருளாதார சூழலில் ஏற்றுமதி என்பது இந்த நாட்டு பொருளாதார ஸ்திரதன் மையை மேம்படுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவ தற்கும் மற்றும் முதலீடுகளை உள்ளீர்ப்ப தற்குமாக ஒரு நம்பிக்கை மிகுந்த பாதையாகக் காணப்படுகின்றது.



# நானுஓயா வீதி தாழிறங்கியது; போக்குவரத்துப் பெரும் பாதிப்பு!

(பி.கேதீஸ்)

நுவரெலியா ஹட்டன் ஏ-7 பிரதான வீதியின் நானுஓயா சந்திக்கு அண்மையில் வீதி தாழிறங்கியுள்ளது. இதனால் ஒரு வழி போக்குவரத்து இடம்பெற்று வருகிறது என்று நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் இந்த வீதியில் பாரிய வெடிப்புகள் ஏற்பட்டிருந்த நிலையில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக வீதி தாழிறங்கியுள்ளது.

இந்தப் பகுதியில் ஒரு வழிப் போக்குவரத்து இடம்பெறுவதால் வாகன சாரதிகள் மிக அவதானமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும் என்று பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





# மட்டக்களப்பு வலய மட்ட மாணவர் நாடாளுமன்ற அமர்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் வலய மட்ட மாணவர் நாடாளுமன்ற அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை (05) கன்னன்குடா மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களைக் கொண்டு வலய மட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை வைத்து அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வே இவ்விதம் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சபாநாயகர், குழுத்தலைவர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது அமர்வின் போது, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தமது கார்களில் வந்திறங்கி சபையில் அமர்ந்ததை தொடர்ந்து, சாபாநாயகர் செங்கோலுடன் அழைத்து வரப்பட்டு, சபை அமர்வு ஆரம்பமானது.

இதன்போது, சபாநாயகர் தனது தொடக்க உரையை மும்மொழிகளிலும் நிகழ்த்தியிருந்தார்.

அவரைத் தொடர்ந்து பிரதமர் ஆங்கிலத்தில் உரையாற்றினார். ஏனைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தமது அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பான கருத்துக்களை முன் வைத்தனர்.

செயலாளர் நாயகமாக மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் பதவி வகித்தார்.



# வெள்ள நீர் வடிந்தோடாததால் சென்னையில் மக்கள் அவதி!

## பாடசாலை, கல்லூரிகளுக்கு நாளையும் விடுமுறை



புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மாணவர்கள் நலன் கருதி நாளை சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கு தமிழக அரசு விடுமுறை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'மிக்ஜாம்' புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையால் சென்னை, மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்கு 4 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை தமிழக அரசு விடுமுறை அறிவித்திருந்தது. புயல் வெள்ளம் பாதித்த சில பகுதிகளில் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மாணவர்கள் நலன் கருதி, நாளை 7 ஆம் திகதி சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளுக்கு தமிழக அரசு விடுமுறை அறிவித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களை கடந்த சில நாட்களாக புரட்டிப்போட்ட மிக்ஜாம் புயல் நேற்று மாலை ஆந்திர மாநிலம், பாபட்லா அருகே 110 கிலோ மீற்றர் வேகத்தில் கரையைக் கடந்தது. சென்னை சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை, வெள்ளம் ஓய்ந்தாலும் கூட சில பகுதிகளில் இன்னும் வெள்ள நீர் வடியாததால் மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர். சென்னையில் வேளச்சேரி, பள்ளிக்கரணை, வியாசர்பாடி, வண்ணாரப்பேட்டை, ஒக்கியம் துரைப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டத்தில் மேற்கு தாம்பரம் ஆகிய பகுதிகளில் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை நிலவரப்படி சென்னை வேளச்சேரியில் மழை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் தனியார் படகுகள் மூலம் மக்கள் வெளியேறி வருகின்றனர். குடிதண்ணீர், பால், உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களைப் பெற முடியாமல் மக்கள் தவித்து வருகின்றனர். இந்தப் பகுதியில் மின்சாரம், தொலைத்தொடர்பு சேவை இன்னும் கிடைக்கவில்லை. ஒருசில பகுதிகளில் ஹெலிகொப்டர் மூலம் உணவுப் பொட்டலங்களை வழங்கும் பணி தற்போதுதான் தொடங்கியுள்ளது. இராணுவம் இந்தப் பணியை மேற்கொண்டுள்ளது.

இதனிடையே, சென்னையில் வேளச்சேரி, பள்ளிக்கரணை, வியாசர்பாடி, வண்ணாரப்பேட்டை, ஒக்கியம் துரைப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டத்தில் மேற்கு தாம்பரம் ஆகிய பகுதிகளில் லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளையில், தமிழகம், ஆந்திராவில் பலத்த சேதங்களை ஏற்படுத்திய மிக்ஜாம் புயல் வலுவிழந்துவிட்டதாகவும், இருப்பினும் இன்று ஒரு சில மாநிலங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய வானில ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, தமிழகத்தில் 'மிக்ஜாம்' புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்திட இடைக்கால நிவாரணமாக 5,060 கோடி ரூபா வழங்கக் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தை தி.மு.க. எம்.பி. டி.ஆர்.பாலு, பிரதமரை நேரில் சந்தித்து வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல், அதிகனமழை காரணமாக பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மின்விநியோகம் நிறுத்தப்பட்டது.

# தெலுங்கானா முதல்வராக நாளை பதவியேற்கின்றார் ரேவந்த் ரெட்டி

தெலுங்கானா மாநிலத்தின் முதல்வராக அம்மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ரேவந்த் ரெட்டியை காங்கிரஸ் மேலிடம் தேர்வு செய்துள்ளது.

தெலுங்கானா மாநில சட்டப் பேரவைக்கு கடந்த மாதம் 30 ஆம் திகதி நடந்த தேர்தலில், 119 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி 64 தொகுதிகளில் வெற்றி பெற்று பெரும்பான்மை பெற்றது.

இதையடுத்து, காங்கிரஸ் மாநில கட்சி தலைவர் ரேவந்த் ரெட்டிதான் அடுத்த தெலுங்கானா மாநில முதல்வர் என கூறப்பட்டது. ஆனால், காங்கிரஸில் முதல்வர் பதவிக்கு மூத்த தலைவர்கள் பலர் போட்டியிட்டனர். இதையடுத்து,



கர்நாடக மாநில துணை முதல்வர் டி.கே.சிவக்குமாரை காங்கிரஸ் மேலிடம் தெலங்கானாவுக்கு அனுப்பிவைத்தது. அவர், சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் யார் என்பதை முடிவு செய்ய ஒரு கூட்டத்தை நடத்தினார். பின்னர், திங்கள் கிழமை இரவு டெல்லிக்கு சென்று நடந்த விவரங்களை கட்சி மேலிடத்துக்கு எடுத்துக் கூறினார்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில், சோனியா காந்தி, ராகுல்காந்தி, டி.கே சிவக்குமார் உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர். பின்னர், அகில இந்திய காங்கிரஸ் கொமிட்டியின் பொது செயலாளர் கேசி. வேணுகோபால் வீட்டிலும் இந்த பிரச்சனை குறித்து நேற்று மாலை ஆலோசனை நடத்தப்பட்டது.

அதன் பின்னர், வேணுகோபால் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், "தெலுங்கானா மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ரேவந்த் ரெட்டியை முதல்வராக அறிவிக்கிறேன். அவர் 7 ஆம் திகதி பதவியேற்பார்." என்றார்.

# பணயக் கைதிகளுக்கு ஹமாஸ் அமைப்பு போதைப்பொருளைக் கொடுக்கின்றது!

## - இஸ்ரேல் சுகாதார அமைச்சு தெரிவிப்பு



இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினரால் கைது செய்யப்பட்ட பணயக் கைதிகளுக்கு போதைப்பொருள் கொடுக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினரால் காசாவிற்கு கொண்டு செல்லப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்கும் பொது அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பது போல் காண்பிப்பதற்காகவே அவர்களுக்கு போதைப்பொருள் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பினரால் அழைத்து செல்லப்பட்ட பணயக் கைதிகள் 51 நாட்கள் ஹமாஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர்,

இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் நிறுத்த பேச்சு வார்த்தை நடைமுறைப்படுத்தப்பட்ட போதே இரு தரப்பிலிருந்தும் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இதன்பொது, விடுவிக்கப்பட்ட கைதிகளை இஸ்ரேலுக்கு அழைத்துச் சென்று மருத்துவப்பரிசோதனை செய்த வேளை அவர்களது குருதியில் போதைப்பொருள் கலந்திருப்பது தெரியவந்துள்ளது.

அவர்களை விடுவிக்கும் போது அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக காட்டுவதற்காக ஹமாஸ் இயக்கம் அவர்களுக்கு போதைப்பொருளை உட்கொள்ளச் செய்துள்ளது என்பது தற்போது தெரியவந்துள்ளதாக இஸ்ரேல் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

# அமெரிக்காவில் பேருந்து விபத்து; 12 பேர் பலி!

அமெரிக்காவின் ஹோண்டுராசில் 60 பேரை ஏற்றிக்கொண்டு சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டெகுசிகல்பாவில் இருந்து சுமார் 41 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பள்ளத்தாக்கின் அடிப்பகுதியில் உள்ள ஓடையில் விழுந்து பாலத்தில் மோதியதால் விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 2 பேர் டெகுசிகல்பாவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் உயிரிழந்தனர்.

20 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.



இதேவேளை, படுகாயம் அடைந்தவர்கள் நோயாளர் காவுவண்டி மற்றும் உலங்கு வானூர்தி மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# உக்ரைனில் ரஷ்ய துணை இராணுவ தளபதி பலி!



உக்ரைனில் ரஷ்ய துணை இராணுவ தளபதி கொல்லப்பட்டுள்ளார் என ரஷ்யாவின் வோரோனேஜ் பிராந்தியத்தின் ஆளுநர் விளாடிமிர் சவாட்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் 14 ஆவது இராணுவப் படையின் துணைத் தளபதியான மேஜர் ஜெனரல் விளாடிமிர் ஜவாட்ஸ்கி உக்ரைனில் கொல்லப்பட்டுள்ளார் என பிராந்திய உயர் அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜவாட்ஸ்கி “சிறப்பு நடவடிக்கை மண்டலத்தில் உள்ள ஒரு போர் முனையில்” இறந்தார் என்று ரஷ்யாவின் வோரோனேஜ் பிராந்தியத்தின் ஆளுநர் அலெக்சாண்டர் குசேவ் திங்களன்று தெரிவித்த நிலையில் மேலதிகதகவல் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை.

“சிறப்பு இராணுவ நடவடிக்கை” என்பது உக்ரைனில் பெப்ரவரி 2022 இல் தொடங்கிய போரை விவரிக்க ரஷ்யா பயன்படுத்தும் சொல்.

ஜவாட்ஸ்கியின் மரணம் ரஷ்யாவால் இறந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட ஏழாவது மேஜர் ஜெனரலாகக் குறிக்கப்பட்டது, போர் தொடங்கியதில் இருந்து இறந்ததாக அறிவிக்கப்பட்ட 12 வது மூத்த அதிகாரி என்று புலனாய்வு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.